உ

குமரன் துணை



# பேராதனைக் குறிஞ்சிக் குமரன்
# திருவூஞ்சல்.

இயற்றியவர்

"இயலிசை வாரிதி"
"ஸாஹித்ய சிரோமணி"
"கவிமாமணி"


யாழ்ப்பாணம்

**பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர்**

(விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்)



இஃது

பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்க
வெளியீடாக வெளியிடப் பெற்றது.

**25-9-1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இந் நூல்

ஸ்ரீமதி கமலாதேவி

வித்யானந்தன்

அவர்களின்

ஆத்ம ஸாந்தி மலராகக் குறிஞ்சிக்

குமரனுக்கு அர்ப்பணிக்கப் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குமரன் துணை

# பேராதனைக் குறிஞ்சிக் குமரன்

# திருவூஞ்சல்.

இயற்றியவர்

"இயலிசை வாரிதி"

"ஸாஹித்ய சிரோமணி"

"கவிமாமணி"

யாழ்ப்பாணம்

**பிரம்மஸ்ரீ மா, த. ந. வீரமணி ஐயர்**

(விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.)

இஃது

பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்க வெளியீடாக வெளியிடப் பெற்றது.

**25-9-1982**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை.

பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்க இணைச் செயலாளரான குமாரி சிவகுமாரி அருணாசலம் அவர்கள் குறிஞ்சிக் குமரன் பேரில் திருவூஞ்சல் ஆக்கித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டார். இத்திருவூஞ்சல் பாடல்களை ஆக்கக் குறிஞ்சிக் குமரனின் அருள் பாலித்தது. ஒவ்வொரு பாமலரும் குறிஞ்சிக் குமரனின் பக்தையான ஸ்ரீமதி கமலா வித்தியானந்தனின் ஆத்ம சாந்தி மலராக அர்ப் பணிக்கப் பெறுவதை தெய்வீகம் உணர்த்தியது.

யாவும் குஹமயம்

அன்பன்

ந. வீரமணி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அளித்த

# ஆசியுரை.

இந்து ஆலயங்களிற் சிறப்பிடம் பெறும் விழா நிகழ்ச்சிகளில் ஒன்று திருவூஞ்சல். அடியவர்கள் தெய்வ விக்கிரகங்களை ஊஞ்சலில் அமர்த்தி ஆட்டி மகிழ்வதாக இது அமையும். இந்நிகழ்ச்சியிற் பயிலும் பாடல்கள் திருவூஞ்சல், ஊஞ்சற் பதிகம் என்னும் பெயர்களைப் பெறும்.

தமிழிலக்கிய வகைகளில் ஒன்றாகிய திருவூஞ்சலின் தொடக்க நிலையினைச் சிலப்பதிகாரம், நந்திக் கலம்பகம், திருவாசகம் ஆகியவற்றிற் காணலாம். ஊசல்வரி, பொன்னூசல் என்னும் பெயர்களிலமைந்த இவ்வகைப் பாடல்கள் ஆடுவோர் தாமே பாடுவதான பண்பில் அமைந்தன. தமிழர் சமுதாயத்தில் ஆலயத்தோடொட்டிய வாழ்க்கைமுறை முதன்மை பெறத் தொடங்கிய சூழ்நிலையில் மக்கள் கலைகளும், விளையாட்டுக்களிற் சிலவும் தெய்வங்களோடு தொடர்புறுத்தப்பட்டன. அவ்வகையில் அடியார்கள் தெய்வ விக்கிரகங்களைப் பீடத்தமர்த்தி ஆட்டி மகிழும் நிகழ்ச்சியில் அவர்களாற் பாடற்படும்பாடல்களாகத் திருவூஞ்சல் இலக்கிய வகை உருப்பெறலாயிற்று.

பொதுவாக ஏனைய பக்தி இலக்கியங்களைப் போலவே திருவூஞ்சலும் இறை புகழ் பாடுவதையும் தலப் பெருமையை உணர்த்துவதையும் நோக்காகக் கொண்டது. விருத்தத்தில் அல்லது கலித்தாழிசையிற் பத்து அல்லது பன்னிரு பாடல்களில் இது அமைவது மரபு. முதற் பாடல் காப்பாகவும் இறுதிப்பாடல் மங்களமாகவும் அமையும். நூலின் தொடக்கப்பாடல்கள் ஊஞ்சலின் அமைப்பையும் அடுத்து வருவன, இறைவனது கோலச் சிறப்பையும், அருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பையும் புலப்படுத்துவனவாக அமையும். சமய முத நூல்களான வேதாகமங்களையும் உபநிடதங்களையும் ஊஞ்சல் அமைவதற்கான தூண்கள், விட்டம், வடம், பீடம் என்பனவாக உருவகிப்பது பொதுமரபு. ஆலயம் அமைந்த தலத்தையே பீடமாக உருவகிப்பதுமுண்டு.

திருவிழாக்கள் நிகழும் இந்து ஆலயங்களிற் பெரும்பாலான தமக்கெனத் திருவூஞ்சற் பாடல்களைக் கொண்டுள்ளன. ஈழத்துச் சைவாலயங்கள் பலவற்றுக்கும் திருவூஞ்சற் பாடல்கள் உள. இவ்வகையிலே இப்பொழுது பேராதனைக் குறிஞ்சிக் குமரன் திருத்தலமும் திருவூஞ்சற் பாடல் பெற்ற தலமாகின்றது.

பல்கலைக் கழகச் சூழலில், பதினொரு ஆண்டுகளுக்கு முன் கோயில் கொண்ட குறிஞ்சிக் குமரனுக்கு நிகழ்த்தப் பெறும் திருவூஞ்சல் நிகழ்ச்சியிற் பாடுவதற்குத் திருவூஞ்சற் பாடல்களின் தேவை நீண்ட நாட்களாக உணரப் பட்டது. அவனருளால் இப்பொழுது அது கைகூடியுள்ளது. ஊஞ்சற் பாடல்கள் இசையோடு பாடுவதற்குரியவை. அதற்கேற்ற வகையில் இசைவல்லார் ஒருவரால் இப்பாடல்கள் இயற்றப்பெற்றுள்ளமை மிகப் பொருத்தமாகிறது. 'இயலிசை வாரிதி' என்ற சிறப்பு விருதுடைய பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயரவர்களின் தகுதியைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும். இலக்கிய மரபைப் பேணி, பல்கலைக் கழகச் சூழலுக்குரிய சொல்லாட்சிகளுடன் பக்தியுணர்வு பொருந்த அவர் இதனைப் பாடியுள்ளார். குமரப் பெருமானது கோலச் சிறப்பையும், அருட்டிறனையும், கோயில் கொண்ட குறிஞ்சிச் சூழலையும், புராண மரபையும் ஒட்டியும் இயற்கையுடன் பொருந்தவும் அவர் வருணித்துள்ளார். முருகன் தந்தையார்க்கு "தண்ணமுத விரிவுரைகள்" தந்தவனென்றும் (5) சக்திதரு கலாநிதி" என்றும் (12) குறிப்பிட்டுள்ளார். வாரத்தின் ஏழு நாட்களின் பெயர்களையும் இணைத்து முருகனது திருவோலக்கச் சிறப்பை வருணித்துள்ளமை (8) ஆசிரியரின் சொல்லாட்சித் திறனுக்குச் சான்றாகின்றது. அவருக்குக் குறிஞ்சிக் குமரனது அருள் நோக்குக் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருநூல் எனது இல்லத் தலைவியாகத் திகழ்ந்த கமலா தேவியின் நினைவாக வெளிவருகின்றது. இறை பக்தியிலும் சிறப்பாக முருக வழிபாட்டிலும் திளைத்து வாழ்ந்து இறையடிகளடைந்த அவரது ஆத்ம சாந்தியின் நினைவாக இம்மலரை முருகனடியிற் சமர்ப்பிப்பதில் நிறைவடைகின்றேன்.

குறிஞ்சிக் குமரன் ஆலயத்துற்கும் எனக்கும் நீண்ட காலத் தொடர்புண்டு. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் திற்கு வரமுன், பல்லாண்டுகளாக அதன் அறங்காவற் குழுத் தலைவராகப் பணியாற்றும் பேறு எனக்குக் கிடைத் தது. அவ்வகையிலும் இத்தகைய திருத்தொண்டில் என க்கு வாய்ப்புக் கிடைத்தமையை நினைத்து நிறைவடை கின்றேன்.

குறிஞ்சிக் குமரன் தொண்டில் உளநிறைவுடன் ஈடு படும் பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் மன் றத்தினர் இத்திருநூலை வெளியிடுகின்றனர். அவர்களுக்கு எல்லா நலனும் சித்திக்க அக்குறிஞ்சிக் குமரன் அருள் வாராக.

சு. வித்தியானந்தன்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை.

போராதனைக் குறிஞ்சிக் குமரன் கோயில், பல்கலைக்கழக வளவில் மலையுச்சியில் கூடகோபுரங்களுடன் கட்டி எழுப்பப் பட்டு முருகனுக்கு நித்திய நைமித்திக பூஜைகள் குறைவற நிகழ்ந்து வரும சிறப்பினையுடையது.

கோயிலில் நிகழும் கிரிகைகளுள் இறைவனை ஊஞ்சலில் எழுந்தருளி ஊஞ்சலாடச் செய்து பேரலொத்சவம் நிகழ்த்தும விழா தனிச் சிறப்பு வாய்ந்தது.

இத்திருவூஞ்சல் விழாவில் பொருள் பொதிந்த தத்துவக் கருத்துக்களைப் பின்னணியாகக் கொண்டு திருவூஞ்சலாடும் வைபவத்தைச் சிறப்பித்துக் கூறும் பாடல்கள் ஒவ்வொரு தலத்திற்கும் அத்தலத்திற்குரிய மூர்த்தி தீர்த்தப் பொலிவுகளுக்கேற்ப யாககப்பட்டு, அவை இவ்விழாவின் பொழுது பாடப்படும வழமை இருககோயில்களில் உண்டு.

போராதனைப் பல்கலைக் கழகத்தில் குறிஞ்சிக் குமரனுக்கு உரியவாறு திருவூஞ்சல் பாடப்பட்டு அச்சிட்டு வெளிவருவது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியது.

இதை யாத்தவர் இயலிசை வாரிதி, சாஹித்ய சிரோமணி, கவிமாமணி யாழ்ப்பாணம்பிரமஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் வீரமணி ஐயர் அவர்கள் ஈழத்தில் தலைசிறந்து விளங்கும் சாகித்ய கர்த்தா எனப் பாராட்டப்படுபவர். தெய்வ அருட்பெருக்கால் இவரிடமிருந்து பிறககும் கவிதைகள் அதிஅற்புதமானவை. தெய்வீகம வாய்ந்தவை. இவற்றையாத்தளித்த வீரமணி ஐயர் அவர்களுக்கு முருகன திருவருளால் தெய்வத்தைத் தமிழால் பாடும் திறமை மேன்மேலும் வளர்வதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் பாரியார் திருமதி கமலா வித்தியானந்தனின் ஆத்ம சாந்திக்காக வெளியிடப்படும் இம்மலர் அவ்வம்மையாரின் நினைவுச் சின்னமாக அமைவதுடன், முருகன் பேரருளால் நித்யானந்த நிரதிசயப் பெருவாழ்வில் ஊன்றியழுந்தும் பேரின்பத்தில் அவரை நிரந்தரமாக நிலைநிற்கத் திருவருள் பாலிப்பதாக.

இவ்வூஞ்சற்பாக்களைப் படிப்பவர்களும், இவற்றை ஊஞ்சல் விழாவில் பாடக் கேட்பவர்களும் திருமுருகன் திருவருளால் இம்மையில் பல போகங்களையும் மறுமையில் உயர் நற்பேற்றையும் பெறுவாராக.

இதை வெளியிடும் பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கம் ஆற்றி வரும் சைவத் திருப்பணி மேன்மேலும் பொலிந்து விளங்குவதாக.

**கா. கைலாசநாத குருக்கள்.**

இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
18-01-1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி.

உலகில் வேறெந்தப் பல்கலைக் கழகங்களிலும் இல்லாத வாறு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் பல் விதமான சமயங்களைச் சேர்ந்த மாணவரினதும் சமய வழி பாட்டு ஸ்தலங்கள் அமைந்துள்ளமை ஒரு தனிப் பெருஞ் சிறப்பாகும்.

இந்த வகையில் இந்துக்களுக்கென இந்து மாணவர்களி னாலும் ஆசிரியர்களினாலும் எத்தனையோ விதமான இன் னல் களிடையே அயரா முயற்சியின் பயனாக அமைக்கப்பட் டதே குறிஞ்சிக் குமரன் கோயில். கோவில் அமைக்கப்பட்டு குடமுழுக்கு நிகழ்ந்த நாள் முதலாக இந்துகளுக்கான விரதங்கள் விழாக்கள் உற்சவங்கள் என்பன முறையாக நடாத்தப்பட்டு வருகின்றது.

மணவாளக் கோல உற்சவத்தின் போது சுவாமி திரு வூஞ்சலில் இருக்கையில் பாடப்படுவதற்காகவும் ஆலயத் துக்கு ஊஞ்சற்பதிகம் இல்லாக் குறையை நிறைவுசெய்யுமுக மாகவும் "பேராதனைக் குறிஞ்சிக் குமரன் திருவூஞ்சற் பதி கம்" பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயரினால் இயற்றப் பெற்றது. இதனை இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உபவேந்தரும் குறிஞ்சிக் குமரன் ஆலயத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையவருமான பேராசிரியா சு. வித்தி யானந்தன் அவர்கள் தமது துணைவியாரின் ஞாபகார்த்தமாக வெளியிடுவதனை வரவேற்று வாழ்த்துகிறேன்.

சி. பாலசுப்ரமணியம்.

பேராசிரியர் சி. பாலசுப்ரமணியம்,
தாவரவியற்றுறை,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவில்கிறோம் நன்றி!

பேராதனைக் குறிஞ்சிக் குமரன் மீது ஊஞ்சற் பதிகம் பாடியருளிய இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கட்கும்,

அதனைப் பாங்குறப் பதிப்பித்து தமது துணைவியாரின் ஞாபகார்த்தமாக வெளியிடும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கட்கும்,

இப்பணியில் பங்குகொண்ட மற்றும் அனைவர்க்கும், குறிப்பாக செல்வி சிவகுமாரி அருணாசலம் அவர்களுக்கும், அவரது அன்னையார்க்கும் பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கத்தினர் நாம் எமது நன்றிகளைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

செயலாளர், இவ்வண்ணம்,

இந்து மாணவர் சங்கம், செ. ரூபசிங்கம்.

பேராதனைப் பல்கலைக் கழகம்.

பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குமரன் துணை

# பேராதனைக் குறிஞ்சிக் குமரன் திருவூஞ்சல்.

(காப்பு)

கலைமாதும் திருமாதும் களித்தே வாழும்
கவின் பேராதனை நகரில் கோயில் கொண்டு
நிலையான நற்கல்வி கலையின் ஞானம்
நெஞ்சுருகும் பக்தருக்கே அருளும் சேந்தன்
தலையான தண்டமிழின் ஊஞ்சலேறித்
தமிழ்க் குறிஞ்சிக் குமரனவன் களித்தே ஆட
மலைமீதில் பாரதத்தை எழுதும் ஞான
மதக்கரியின் செஞ்சரணம் காப்பதாமே.

★ ★ ★

(நூல்)

இருக்குயசுர் சாமம்அதர் வணநால் வேதம்
இனியவெழிற் பொற்பவளக் கால்களாக
விருப்புமிகு சிவாகமமே விட்டமாக
வியன் கலையின் ஞானங்கள் வடங்களாக
கருப்பொருளாம் ஓங்காரப் பீடமான
கவின்தமிழின் ஊஞ்சலதன் மீதில் வைகிக்
குருப்பரவு கலைப்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமருளும் பக்தியெனும் கால்நி றுத்தி
நானிலத்தில் பஞ்சபுலன் விட்டம் பூட்டி
பலமிகுநாத் சரணமெனும் வடங்கள் மாட்டி
பக்குவமாய்த் திருவருளாம் பலகை தேக்கி
நிலவிடுநற் சிவனவன் முத்தி ஊஞ்சல்
நீடுபுகழ்ப் பேரின்ப மாக ஆடக்
குலவும் அருள் மலர்ப்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.

பிஞ்சிளம் பிறைசூடி நுதற்கண் ஆறு
பொறிப்பிழம்பாய்த் தோன்றுசர வணத்தில் வந்தே
கஞ்சமலர் மீதாறு பால ராகிக்
கெளரியவள் அரவணைக்கக் கந்த னுைய்
மஞ்சுதவழ் கலைக்கோயில் அமர்ந்த தேவா
மன்னுகலை ஞானம் அருள் மயிலன் நீயே
கொஞ்சுதமிழ்த் தலப்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.

முன்னம் அயன் அகந்தைதனைத் தீர்த்தே வைக்க
முதுகலையின் மாணியென நின்றோங்காரம்
தன்னையுப தேசித்துத் தந்தை யார்க்கே
தண்ணமுத விரிவுரைகள் தந்தே நின்றாய்
மன்னிடுநற் சிவகுருவாய் வந்த ஞான
மயிலவனே மன்னுதமிழ்க் கவிஞன் நீயே
கன்னலிசைத் தமிழ்ப்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.

அருள்பொழியும் விழிமலரீ ராறும் ஆட
அம்புஜத்தின் திருவதனம் ஆறும் ஆட
பெருகும் அருள் இதழ்மலரின் முறுவல் ஆட
பூமலரின் கடம்பவணி யாரம் ஆட
உருகுமடி யவருள்ளம் உவந்தே ஆட
உமையாடப் பரனாட உலகு மாடத்
குருகினம்சூழ் பொழிற்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிதோகை மயிலாடச் சேவல் ஆட
வேலாட விழியாட விசும்பும் ஆட
அரியாட அயன் ஆட அண்டம் ஆட
அபயமொடு வரத்தநின் கரங்களாட
புரிநூலும் பூமாலை அசைந்தே ஆட
புகழ்பாடும் அடியவரின் உள்ளம் ஆட
கிரிசூழும் நதிப்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.

இந்துவெனும் திங்கள் வெண் குடையை ஏந்த
இதழ்ச் செவ்வாய் அரம்பையரும் மகிழ்ந்தே பாட
பந்தமுடன் மதன் கரும்பு தனைத் தாங்கப்
பரிந்துகலைச் செல்வி யாழுன் பாயிசைக்க
சுந்தரமாய் வெள்ளிமயில் ஆசனித்தே
சூரியராம் ஞாயிறு பல்கோடி ரூபன்
கொந்தவிழும் பூம்பேரா தனையில் மேவும்
குறிஞ்சி வளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.

செஞ்சடையான் சிவனுமையோர் வடந்தொட்டாட்ட
ஸ்ரீதரனும லக்குமியோர் வடந்தொட்டாட்ட
கஞ்சவயன் வாணியுமோர் வடந்தொட்டாட்ட
கசிந்துருகி அடியருமோர் வடந்தொட்டாட்ட
வஞ்சிகுற வள்ளியொடு தேவயானை
வடிவேலும் கொடிச்சேவல் மயிலும் மேவ
குஞ்சரங்கள் பொலிபேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.

செல்விகலை வாணியவள் உவந்தே போற்ற
செந்திருவும் நினைப்போற்றித் துதிகள் செய்ய
பல்கலையின் மூதறிஞர் பரவிப் பாடப்
பசுங்கலையின் பட்டமெலாம் அருளும் தேவா
மல்கிடுகண் ணீர்சொரிய மலரின் பாதம்
மாணவரும் தொழுவருளும் மயிலன் நீயே
கல்வி மிளிர் கலைப்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயில்ஏவி அசுரர்குலம் அழித்த தீரா!
அருணகிரித் தமிழ்மாந்தி அருளும் வீரா!
மயில்ஏறி விளையாடும் கடம்ப மார்பா!
மன்னுதமிழ் அவ்வைப்பா மகிழ்ந்த நாதா!
பயிலாற்றுப் படைதந்த கீரன் காணப்
பச்சைமயி லேறிவந்த பரமன் பாலா
குயில்கூவும் பொழிற்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.

பொங்குமெழில் வேலவனே ஆடீர் ஊஞ்சல்
பெருஞானக் கலைப்பழமே ஆடீர் ஊஞ்சல்
சங்கம்வளர் தமிழ்க்கவிஞ ஆடீர் ஊஞ்சல்
சக்திதரு கலாநிதியே ஆடீர் ஊஞ்சல்
தூங்குமுகன் சோதரனே ஆடீர் ஊஞ்சல்
தோகைமயில் வாகனனே ஆடீர் ஊஞ்சல்
குங்குமமங் கலப்பேரா தனையில் மேவும்
குறிஞ்சிவளர் குமரனே ஆடீர் ஊஞ்சல்.

(வாழி)

இணை நூலோர் வேதியரும் வாழி! வாழி!!
இனமாரி சைவநெறி அறனும் வாழி!
துணையான செங்கோலின் நீதி வாழி!
தூயகலை கல்வியெலாம் துலங்கி வாழி!
மணமக்கள் மங்கலமும் வாழி! வாழி!!
மங்கையரின் கற்புநெறி ஞானம் வாழி!
குணசீலக் கலைப்பேரா தனையும் வாழி!
குறிஞ்சிவளர் குமரா நீ வாழி! வாழி!!

" சுபம் "

பேராதனைக் குறிஞ்சிக் குமரன் திருவூஞ்சல்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து மாணவர் சங்கம்

பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.

**1982 / 1983**

லங்கா அச்சகம், ராஜ வீதி, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org